**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM I
8069806
C

1. District மாவட்டம் : திருச்சி
   PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
   Year ஆண்டு: 2020
   FIR No. மு.த.அ. எண்: 06
   Date நாள்: 12.12.2020

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act – 1988 (as amended in 2018)
   Sections பிரிவுகள்: 7(a) and 7(a) r/w 12 of Pc Act – 1988 (as amended in 2018)
   (ii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:
   Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 11.12.2020
   Date to நாள் வரை : 11.12.2020
   Time Period நேர அளவு :
   Time from நேரம் முதல் : 16.00 hrs
   Time to நேரம் வரை : 20.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.12.2020
   Time நேரம் : 11.30 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
   Time நேரம் :

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
   எழுத்து மூலம் (கணினியால் தட்டச்சு செய்யப்பட்ட)

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 40 கி.மீ தென் மேற்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி சார் பதிவாளர் அலுவலகம், மணப்பாறை, திருச்சி மாவட்டம்.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி. இ. சந்திரமாலி
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் இருசாமி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 42
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் —
   Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் சட்ட ஆலோசகர் அலுவலர் (துணை வட்டாட்சியர்)
   (g) Address : முகவரி திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருச்சிராப்பள்ளி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு. புலிப்பாண்டியன், த/பெ வெள்ளைச்சாமி, சார் பதிவாளர், மணப்பாறை சார் பதிவாளர் அலுவலகம், திருச்சி மாவட்டம்.
   2) திரு. தவமணி த/பெ முருகேசன், 3/703, ஸ்ரீராம் பெரியார் நகர், தீஅட்டுப்பட்டி, தியாகேசர் ஆலை (அஞ்சல்) மணப்பாறை, திருச்சி

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   – தாமதம் இல்லை –

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

<u>கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.</u>

நான் (ம.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர்) 12.12.2020 அன்று காலை 11.30 மணியளவில் திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, திருச்சி மாவட்டம், திருச்சிராப்பள்ளி கிழக்கு, வட்ட வழங்கள் அலுவலர் (துணை வட்டாட்சியர்) திருமதி.கு.சந்திரமாலி அவர்கள் என் முன்பாக ஆஜராகி, திருச்சி மாவட்டம், மணப்பாறை சார்பதிவகத்தில் 11.12.2020 ஆம் தேதி நடத்தப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகளின்படி நடவடிக்கை எடுக்கவேண்டி, 12.12.2020 தேதியிட்ட வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். மேற்படி வேண்டுகோள் கடிதம் மற்றும் திடீர் சோதனை செயல்முறைகள் பின்வருமாறு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு [signature] 12/12/2020

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 12/12/2020

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. நவநீதகிருஷ்ணன்
Rank: காவல் ஆய்வாளர் No. எண் .........
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி.

திருச்சி ஊ.த.க. பிரிவு கு.எண்.06/2020–இன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.......

அனுப்புநர் கு.சந்திரமாலி, வயது 42/2020, த/பெ.குருசாமி, வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்), திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருச்சி பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அய்யா, பொருள்: திருச்சி – மணப்பாறை சார்பதிவாளர் அலுவலக – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி. திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் 11.12.2020ஆம் தேதி, மாலை சுமார் 15.00 மணியளவில் திருச்சி, ஊ.த.க பிரிவு அலுகலத்திலிருந்து, திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ம.நவநீதகிருஷ்ணன் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் ஆகியோருடன் புறப்பட்டு, திருச்சி மாவட்டம், மணப்பாறை சார்பதிவளார் அலுகலகத்தில் மாலை சுமார் 16.00 மணிக்கு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது, மேற்கண்ட சோதனையின் போது ரூ.23,500/–ஐ கைப்பற்றப்பட்டு, திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) 17.00 மணி முதல் 20.30 மணிவரை தயார் செய்யப்பட்டது. திடீர் சோதனையின் போது திரு.வெ.புலிப்பாண்டியன் வயது 47/2020, த/பெ. வெள்ளைசாமி, சார்பதிவாளர், மணப்பாறை என்பவரை விசாரித்தபோது கிடைத்த தகவலின் பேரில் மணப்பாறையில் உள்ள திருச்சி திண்டுக்கல் நெடுஞ்சாலையில் உள்ள ஹோட்டல் குறிஞ்சியில் அவர் தங்கியிருந்த அறை எண் 203–ஐ காவல் ஆய்வாளர் திரு.ம.நவநீதகிருஷ்ணன் அவர்களால் என் முன்பாக சோதனை செய்யப்பட்டு, பணம் ரூ.1,28,000/–ஐ சோதனை ஜாபிதா மூலம் கைப்பற்றப்பட்டது. இத்துடன் 11.12.2020ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் (மகஜர்) இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி (மகஜர்) நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள Sd.xxxx G.Chandramali. 12.12.2020 Submitted to the Court of the Hon'ble Special Judge. for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report at 11.30 hours on 12.12.2020 and registered a case in Trichy V&AC Cr.No.06/2020, u/s 7 (a) and 7(a) r/w 12 of Prevention of Corruption Act - 1988 (as Amended in 2018) at 12.30 hrs on 12.12.2020.(Sd) M.Navaneethakrishnan, 12.12.2020, Inspector of Police, V&AC, Trichy. திடீர் சோதனை செயல்முறை (மகஜர்) இன்று 11.12.2020 மாலை 17.00 மணிக்கு திருச்சி மாவட்டம், மணப்பாறை பகுதியில், மணப்பாறை தாலுக்கா அலுவலகம் மற்றும் மணப்பாறை காவல் நிலையம் அமைத்துள்ள வளாகத்தினுள் உள்ள மணப்பாறை சார்பதிவகத்தை திருமதி.சந்திரமாலி, த/பெ குருசாமி, வட்ட வழங்கல் அலுவலர்(துணை வட்டாட்சியர்), திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் மற்றும் அவரது குழுவினர் உதவியுடன் மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை

நடவடிக்கைகள் பொருத்து மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் செயல்முறை நடவடிக்கை மகஜர். திருச்சி மாவட்டம், மணப்பாறை பகுதியில், மணப்பாறை தாலுக்கா அலுவலகம் மற்றும் மணப்பாறை காவல் நிலையம் அமைத்துள்ள வளாகத்தினுள் உள்ள மணப்பாறை சார்பதிவகத்தில், பதிவு உள்ளிட்ட ஏனைய அரசு அலுவல்களை செய்து கொடுக்க க்ஷ சார்பதிவக பணியாளர்கள், நேரிடையாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலமாகவும் கையூட்டு கேட்டுப்பெறுவதாக கிடைத்த தகவலின் பேரில், இன்று 11.12.2020 மாலை சுமார் 16.00 மணிக்கு க்ஷ அலுவலர்கள் க்ஷ சார்பதிவக அலுவலகத்தை முன்னறிவிப்பின்றி திடீர் சோதனை செய்வதற்கு க்ஷ சார்பதிவக அலுவலக முன்பக்க பிரதான கதவு வழியே உள்ளே நுழைந்ததும் க்ஷ சார்பதிவகத்தை சுற்றி நான்கு திசைகளிலும் காவலர்களை பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டது. அடுத்து சார்பதிவகத்தின் உள்ளே நுழைந்ததும் கிழக்கு மேற்காக பொது மக்கள் அமர கூடிய சேருடன் வராண்டாவும், அதன் உள்ளே நுழைந்ததும் ஹாலும், அதன் மையத்தில் கிழக்கு பார்த்து தெற்கு ஓரத்தில் சார்பதிவாளர் அமரகூடிய உயரமான மேடை பகுதி உள்ளது. மேற்படி அறையில் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். மேலும் அந்த ஹாலின் கிழக்கு புறம் கண்ணாடியால் தடுக்கப்பட்டு, அதன் உள்ளே மூன்று நபர்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த அறையில் சுமார் 10–க்கும் மேற்பட்ட நபர்கள் ஆங்காங்கே நின்று கொண்டிருந்தார்கள். அந்த ஹாலிருந்து உள்ளே தெற்கு பக்கம் உள்ளே நுழைந்தவுடன் நீளவாக்கில் இருந்த அறையில் ஒரு பெண் கணினியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார் மற்றும் 5, 6 நபர்கள் நின்றுக்கொண்டிருந்தனர். மேற்படி அறையின் கிழக்கு புறம் கண்ணாடியால் தடுக்கப்பட்ட இரண்டு அறைகள் உள்ளன. மேற்படி அறையில் கணிணி இருந்தன. மேற்படி ஹாலிலிருந்து தென்புறம் அடுத்தடுத்து ஆவணங்கள் வைத்துள்ள மூன்று அறைகள் இருந்தது. மேற்படி இரண்டாவது ரெக்கார்டு அறையில் ஒரு நபர் அமர்ந்திருந்தார். ஆய்வு குழு அலுவலர்களை கண்டவுடன் அவர் தன் கையிலிருந்து வெள்ளைத்தாளில் கத்தையாக மடித்து வைத்திருந்ததை ஆவணங்கள் மீது Fக்கி வீசி எறிந்தார். அந்த நபர் அருகில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபர் தன் கையிலிருந்த பணத்தை ஆவணங்கள் நடுவே திணித்தார். அலுவலகத்தின் அனைத்து அறைகளுக்கும் காவலர்களை அனுப்பி பாதுகாப்புக்காக நிற்க செய்யப்பட்டது. சார்பதிவாளர் மற்றும் அங்கு பணியாற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் வந்திருக்கும் அரசு சாட்சி மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு குழுவினரையும், திடீர் சோதனை செய்ய வந்த விபரத்தையும் கூறி சோதனை தொடங்கப்பட்டது. சார்பதிவாளர் அறையில் உள்ள நபரை விசாரிக்க, அவர் தன் பெயர் திரு.ராமராஜ், வயது.49/2020, த/பெ.மருதை என்றும் தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பனிபுரிவதாக சொன்னார். அவரிடம் வேறு ஏதும் பணம் உள்ளதா என்று துணை

வட்டாட்சியர் திருமதி.சந்திரமாலி அவர்கள் கேட்க, அவர் தன்னிடமிருந்த ரூ.450/–ஐ எடுத்து ஆஜர் செய்தார். அப்பணம் பற்றி கேட்க அது தன் சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னார். மேற்படி பணத்தை சார்பதிவாளர் கையிருப்பு பதிவேட்டுடன் ஒப்பிட்டுப்பார்க்க, குறைவாக இருந்தது. மேற்படி பணத்தை அவரையே வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. மேலும், அங்கு புகைப்படம் எடுக்கும் இடத்தில் அமர்ந்திருந்த நபரை பற்றி விசாரிக்க, அவர் தன் பெயர் சரவணன், வயது32/20, த/பெ.பழனி என்றும், தான் சார்பதிவகத்தில் கணிணி உள்ளீட்டாளராக தொகுப்பு ஊதியத்தில் பணிபுரிவதாக சொன்னார். அவரிடம் வேறு ஏதும் பணம் உள்ளதா என்று துணை வட்டாட்சியர் திருமதி.சந்திரமாலி அவர்கள் கேட்க, அவர் தன்னிடம் பணம் எதுவும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் அங்கு நின்று கொண்டிருந்த தனிநபர்களை துணை வட்டாட்சியர் விசாரிக்க, 1)திரு.சாகுல் அமீது, வயது.68/20, த/பெ.அல்லாபிச்சை, மணப்பாறை, 2) திரு.கனி, வயது.52/20, த/பெ.அல்லாபிச்சை, மணப்பாறை, 3) திரு.மாலிக், வயது.39/20, த/பெ.சேட்டு, மணப்பாறை, 4) திரு.சாகுல் அமீது, வயது.45/20, த/பெ.மொய்தீன், மணப்பாறை, 5) திரு.நூர்முகமது, வயது.57/20, த/பெ.அப்துல் ரகுமான், மணப்பாறை ஆகியோர்கள் பாகபிரிவினை செய்து முடித்து, கையொப்பம் செய்ய நின்று கொண்டிருந்ததாக தெரிவித்தார்கள். மேற்படி நபர்களிடம் வேறு பணம் எதுவும் வைத்திருக்கிறீர்களா என்று கேட்க, அவர்களில் திரு.மாலிக், த/பெ.சேட்டு என்பவரிடம் ரூ.2,04,000/– பணம் வைத்திருந்தார். மற்ற நபர்களிடம் சொந்த பணமாக சொற்ப தொகை வைத்திருந்தனர். அப்பணம் தங்களது சொந்த செலவுக்காக வைத்திருப்பதாக தெரிவித்ததால் அப்பணத்தை அவர்களையே வைத்துக்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. திரு.மாலிக்கிடம் வைத்திருந்த பணம் பற்றி துணை வட்டாட்சியர் கேட்க, அவர் தான் மணப்பாறையில் எம்.என்.எஸ். கேபிள் டி.வி. ஆப்ரேட்டராக வேலை செய்வதாகவும், மேற்படி பணம் சந்தாதாரர்கள் மற்றும் தனியார் கேபிள் சேனல்களிடமிருந்து வசூல் செய்யப்பட்ட தொகை என்றும், அதற்குரிய வசூல் நோட்டை காண்பித்தார். மேலும், மேற்படி பணம் திருச்சியில் கேபிள் டி.வி. தொடர்பான பொருட்கள் வாங்க வைத்திருந்ததாகவும், சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அதிக பணத்துடன் வரக்கூடாது என்பது தனக்கு தெரியாது என்று சொன்னார். திரு.மாலிக், த/பெ.சேட்டு என்பவரை எச்சரித்து மேற்படி ரூ.2,04,000/– பணத்தை துணை வட்டாட்சியர் மூலம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அந்த ஹாலிருந்து உள்ளே தெற்கு பக்கம் உள்ளே நுழைந்தவுடன் நீளவாக்கில் இருந்த அறையில் ஒரு பெண் கணினியில் வேலை பார்த்துக்கொண்டிருந்தார். அவரை பற்றி கேட்க திருமதி.லட்சுமி, வயது.31/20, க/பெ.அருண், மணப்பாறை என்றும் தான் சார்பதிவாளர் அலுவலகத்தில் கணிணி ஆப்ரேட்டராக பணிபுரிவதாக சொன்னார். அவரிடம் வேறு ஏதும் பணம் உள்ளதா என்று துணை வட்டாட்சியர் திருமதி.சந்திரமாலி அவர்கள் கேட்க,

தன்னிடம் வைத்திருந்த பணத்தை செலவுக்காக கொடுத்து விட்டதாகவும், தற்போது எந்த பணமும் இல்லை சொன்னார். மேலே சார்பதிவாளர் அறையில் அடுத்துள்ள ஹாலில் உள்ள நபர்களை துணை வட்டாட்சியர், பெயர் முகவரி கேட்டு விசாரிக்க, அவர்கள் கீழ்கண்டவாறு தங்களது பெயர், முகவரி மற்றும் தங்களிடம் உள்ள பணம் பற்றிய விபரம் தெரிவித்தார்கள்.

| வ. எண் | பெயர், முகவரி | அலுவலகதிற்கு வந்ததற்கான காரணம் | வைத்திருந்த பணம் பற்றிய விபரம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.சுந்தரி, வயது.33/2018, த/பெ.தமிழ்செல்வன், ஆர்.எஸ்.வையம்பட்டி, மணப்பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம். | வில்லங்கச் சான்று பற்றி விபரம் கேட்க | -- |
| 2 | திரு.யாசின், வயது.32/20, த/பெ.அசன் முகமது, கீழத்தெரு, புத்தாநத்தம், மணப்பாறை தாலுக்கா | MOD | ரூ. 2500/– சொந்தப்பணம் |
| 3. | திரு.சுலைமான், வயது.54/20, த/பெ.அப்துல் ஜபார், நடுத்தெரு, புத்தாநத்தம், மணப்பாறை தாலுக்கா | MOD | -- |
| 4 | திரு.தங்கராஜ், வயது.32/20, த/பெ.அருணகிரி, எண்.302, மதுரைரோடு, மணப்பாறை. | பத்திர நகல் பெற | ரூ.990/– சொந்தப்பணம் |
| 5 | திரு.மரியஜோசப், வயது.40/20, த/பெ.ஆரோக்கியசாமி, குருநாதன்பட்டி, ஆவூர் அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம். | பத்திர நகல் பெற | ரூ.190/– சொந்தப்பணம் |
| 6 | திரு.அழகேசன், வயது.35/20, த/பெ.பெருமாள், தவுட்டுப்பட்டி, தி.ஆலை, மணப்பாறை. | பத்திர நகல் பெற | ரூ.1040/– சொந்தப்பணம் |
| 7 | திரு.கண்ணன், வயது.35/20, த/பெ.காந்திகுருக்கள், தவுட்டுப்பட்டி, தி.ஆலை, மணப்பாறை. | பத்திர நகல் பெற | ரூ.530/– சொந்தப்பணம் |

மேற்கண்ட 7 தனிநபர்கள் வைத்திருந்த பணம் பற்றி துணை வட்டாட்சியர் கேட்க, அவர்கள் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி பணத்தை அவர்களையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது. மேற்படி ஹாலில் நீளவாக்கில்

இருந்த அறைக்கு கிழக்கு பக்கம் கண்ணாடியால் தடுக்கப்பட்ட மூன்று அறைகள் இருந்தன. அதில் வடக்கு பக்கம் இருந்த முதல் அறையில் மூன்று நபர்கள் கணிணியில் அமர்ந்து வேலை செய்து கொண்டிருந்தனர். மேற்படி நபர்களை துணை வட்டாட்சியர், பெயர், பதவி மற்றும் முகவரி கேட்டு விசாரிக்க, அவர்கள் கீழ்கண்டவாறு தங்களது பெயர், முகவரி மற்றும் தங்களிடம் உள்ள பணம் பற்றிய விபரம் தெரிவித்தார்கள்.

| வ. எண் | பெயர், பதவி மற்றும் முகவரி | வைத்திருந்த பணம் பற்றிய விபரம் |
|---|---|---|
| 1 | திரு.செந்தில்குமார், வயது.25/20,<br>த/பெ.பொன்னன்,<br>புகைப்படம் எடுப்பவர்,<br>சார்பதிவகம்,<br>மணப்பாறை. | ரூ. 500/–<br>சொந்தப்பணம் |
| 2 | திரு.செந்தமிழ்செல்வன், வயது.57/20,<br>த/பெ.சிதம்பரம்,<br>இளநிலை உதவியாளர்,<br>சார்பதிவகம்,<br>மணப்பாறை. | ரூ.160/–<br>சொந்தப்பணம் |
| 3. | திரு.அரவிந்த், வயது.26/20,<br>த/பெ.கனகராஜ்,<br>கணிணி உள்ளீட்டாளர்,<br>சார்பதிவகம்,<br>மணப்பாறை. | ரூ.277/–<br>சொந்தப்பணம் |

மேற்கண்ட 3 சார்பதிவக அலுவலர்களிடம் வைத்திருந்த பணம் பற்றி துணை வட்டாட்சியர் கேட்க, அவர்கள் தன்னுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், மேற்படி பணத்தை அவர்களையே வைத்துக்கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது. மேற்படி ஹாலிலிருந்து தென்புறம் அடுத்தடுத்து ஆவணங்கள் வைத்துள்ள மூன்று அறைகளில், இரண்டாவது ஆவண அறையில் அமர்ந்திருந்த ஒரு நபரை துணை வட்டாட்சியர் விசாரிக்க அவர் தன் பெயர் புலிப்பாண்டியன், வயது 47/2020, த/பெ வெள்ளைசாமி, சார்பதிவாளர் என்று கூறினார். மேலும், தனக்கு சக்கரை வியாதி இருப்பதால், எனக்கு தலை சுற்றல் வந்தால், பின்புறம் உள்ள ஆவண அறைக்கு சற்று ஒய்வு எடுக்கவந்தேன் என்று தெரிவித்தார். மற்றொரு நபரை விசாரிக்க அவர், தன் பெயர் தவமணி வயது 34/2020, த/பெ.முருகன் என்றும் தன்னை சார்பதிவாளர் திரு.புலிப்பாண்டியன் அவர்கள் தினக்கூலியாக வேலைக்கு அமர்த்தி இருப்பதாகவும் சொன்னார். மேற்படி நபர்களில் சார்பதிவாளர் திரு.புலிப்பாண்டியால் தூக்கி வீசப்பட்ட வெள்ளைத்தாள் கத்தையை, திருமதி.சந்திரமாலி, த/பெ குருசாமி, வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்), திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருச்சி என்பவர் மூலம் எடுத்து எண்ணிப்பார்க்க, அந்த வெள்ளைத்தாள் கத்தையில் 2000, 500 ரூபாய் நோட்டுக்களாக மொத்தம் ரூ.10,000/– (ரூ.2000x2 மற்றும் ரூ.500x12) இருந்தது. அந்த பணத்தை பற்றி வட்ட வழங்கல்

அலுவலர் (துணை வட்டாட்சியர்) அவரிடம் கேட்க எதுவும் பேசாமல் மவுனமாக இருந்தார். மேற்படி பணம் பத்திரபதிவு செய்யவந்த பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்காக கையூட்டாக கேட்டு பெற்று வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களால் கைப்பபற்றப்பட்டது. மேற்படி மற்றொரு நபரான திரு.தவமணியால் ஆவணங்களில் திணிக்கப்பட்ட பணக்கத்தையை, திருமதி.சந்திரமாலி, த/பெ குருசாமி, வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்), திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருச்சி என்பவர் மூலம் எடுத்து எண்ணிப்பார்க்க, 500 ரூபாய் நோட்டுக்களாக மொத்தம் ரூ.13,500/– (ரூ.500x27) இருந்தது. அந்த பணத்தை பற்றி வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்) அவரிடம் கேட்க எதுவும் பேசாமல் மவுனமாக இருந்தார். மேற்படி பணம் பத்திர பதிவு செய்ய வந்த பொதுமக்களிடம் பத்திரம் பதிவு செய்வதற்காக கையூட்டாக கேட்டு பெற்று, அவற்றை சார்பதிவக அலுவலர்களுக்கு கொடுக்க வைத்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி பணம் காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களால் கைப்பற்றப்பட்டது. இன்று (11.12.2020) பத்திர பதிவு ஆவணங்களின் எண்ணிக்கை 23, வில்லங்கச்சான்று 19, பத்திர நகல் கோரிய விண்ணப்பம் 7 ஆகும். காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க கணிணியில் பதிவிறக்கம் செய்யப்பட்ட 11.12.2020 ஆம் தேதிக்கான A கணக்கு விபரம், D கணக்கு விபரம், CD கணக்கு விபரம் மற்றும் உட்பிரிவு கணக்கு விபரம் ஆகியவைகளை உண்மை நகலிட்டு பெறப்பட்டது. மேலும், மணப்பாறை சார்பதிவாளர் அலுவலக 2020 ஆம் ஆண்டு வருகைப்பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.புலிப்பாண்டியன் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2020 ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் 11.12.2020 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. தனிநபர் கையிருப்பு பதிவேட்டை கேட்க கூஷ சார்பதிவாளர் திரு.புலிப்பாண்டியன் ஆஜர் செய்தார். அப்பதிவேட்டில் 2020 ஜனவரி மாதம் 1ம் தேதி முதல் 11.12.2020 தேதிவரை குறிப்புகள் காணப்பட்டது. அப்பதிவேடு இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளர் திரு.நவநீதகிருஷ்ணன் அவர்களால் கைப்பற்றப்பட்டது. மேற்படி அலுவலகம் முழுவதும் மின்வசதி செய்யப்பட்டிருந்தது. இந்த திடீர் சோதனை இரவு 20.30 மணிக்கு முடிக்கப்பட்டது. திடீர் சோதனை செயல்முறைகளில் 5 பக்கங்களின் அடியில் திருமதி.கு.சந்திரமாலி, வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்), திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருச்சி, திரு.ம.நவநீதகிருஷ்ணன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி ஆகியோரின் கையொப்பம் மற்றும் 5வது பக்கத்தில் மட்டும் மேற்படி அலுவலர்களுடன், நகல் பெற்றுக்கொண்டேன் என்று எழுதி திரு.புலிப்பாண்டியன், சார்பதிவாளர், மணப்பாறை மற்றும் திரு.தவமணி ஆகயோர்கள் கையொப்பம் செய்துள்ளார்கள். மேற்படி திடீர் சோதனை செயல்முறையில் கண்டுள்ள நபர்களான

எதிரிகள் 1)திரு.புலிப்பாண்டியன், சார்பதிவாளர், மணப்பாறை சார்பதிவாளர் அலுவலகம், திருச்சி மாவட்டம் மற்றும் 2)திரு.தவமணி, த/பெ.முருகன், தந்தை பெரியார் நகர், தவுட்டுப்பட்டி, தியாகேசர் ஆலை(அஞ்சல்), மணப்பாறை, திருச்சி மீது திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2020, ச/பி 7 (a) and 7(a) r/w 12 of Prevention of Corruption Act - 1988 (as Amended in 2018)–ன்படி இன்று 12.12.2020 தேதி மதியம் 12.30 மணிக்கு குற்ற வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல், திருச்சி, திருச்சிராப்பள்ளி கிழக்கு, வட்ட வழங்கல் அலுவலர் (துணை வட்டாட்சியர்), திருமதி.கு.சந்திரமாலி அவர்கள் கொடுத்த 12.12.2020 தேதியிட்ட கடிதத்தின் அசல், 11.12.2020 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை(மகஜர்) அசல், சார்பதிவாளரின் தங்கிருந்த அறையை சோதனை செய்ததற்கான சோதனை ஜாபிதா அசல், திரு.வெ.புலிப்பாண்டியன், த/பெ.வெள்ளைசாமி, சார்பதிவாளர், மணப்பாறை, திருச்சி மற்றும் திரு.தவமணி, த/பெ.முருகன், மணப்பாறை ஆகியோர்களிடம் திருமதி.கு.சந்திரமாலி அவர்களால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்களின் அசல் ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இதர நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

M. N [signature] 12/12/2020
(M. NAVANBETHA KRISHNAN)
Inspector of Police
VSAC, Trichy.